தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை: 16

சேவைப் பிரிவு: **MA 3**

## பதவியின் தன்மை

- நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும்போது நிர்வாக அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- நிறுவனத்தின் சகல உத்தியோகத்தர்களினதும் விடுமுறை தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்.
- நிறுவனத்தின் பணியாளர்களின் நலனோம்புகை வசதிகள், பணிக்கொடை, கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாப நிதியம், எனைய நன்மைகள் கொடுப்பனவு தொடர்பான சகல நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் அதிகாரிகள் ஒப்படைக்கும் கடமைகளை நிறைவேற்றுதல்.
- அவசியமான சந்தர்ப்பங்களில் பிரிவின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய நிர்வாக முறைமைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்குரியதான முன்மொழிவுகளை உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு சமர்ப்பித்தல்.
- நிறுவனத்தினால் ஒருங்கிணைப்புச் செய்யப்படும் நிழ்ச்சிகளுக்குரிய அனைத்து முற்பணங்களைப் பெறுதல், மீளளிப்புச் செய்தல், தீர்ப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான அனைத்து உறுதிச்சீட்டுகளையும் (வவுச்சர்) தயாரித்தல், ஆவணங்களைக் கோப்பிலிட்டு கோப்பில் குறிப்புகளை எழுதி விதப்புரைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பித்தல் மற்றும் மேலதிக நடவடிக்கைகளுக்காகக் கணக்குப் பிரிவிடம் கையளித்தல்.

- நிறுவனம் தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புச் செய்தல், திட்டமிடப்படும் வேலைத்திட்டங்களை அடிமட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- கணக்காய்வுக் கேள்விகளுக்குரியதாக நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்த பிரிவுகளிடம் தேவையான தகவல்களைக் கோரி உள்ளகக் கடிதங்களைத் தயாரித்து அனுப்புதல், உரிய தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் அவற்றை ஒருங்கிணைத்து பிரதிப் பணிப்பாளர் (நிதி) அவர்களின் அனுமதியுடன் கோப்பிலிட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கோப்புகளைப் பேணுதல்.

- பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

## தகைமைகள் (கீழ்வரும் 1 அல்லது 2)

பொது நிர்வாகம் / சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு / மனித வள முகாமைத்துவம் / சட்டம் / சமூகவியல் / வியாபார நிர்வாகம் / தகவல் தொழில்நுட்பம் / வணிகம் / நிதி முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / சர்வதேச உறவுகள் அல்லது பதவிக்குரிய விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

## வயதெல்லை

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## சம்பள அளவுத்திட்டம்

**MA 3 -** 2025 **- ரூ.** (**53,940 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 5 x 1,350 - 94,980**)

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)